**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No.02/2024**

**Prosecution Witness**

**Name** : திரு. செல்வசேகர்
**Father's/Spouse's Name** : சந்திரகாசு
**Address** : அக்ரஹாரம் வாணியக்கரம்பை, பட்டீஸ்வரம் கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
**Calling** : திருக்கோவில் தமிழ் புலவர் (அருள்மிகு தேனுபுரிஸ்வரர் திருக்கோவில், பட்டீஸ்வரம்.
**Religion** :இந்து
**Age** :54

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 03.04.2024.**

**Signature of witness,**

**(A1, A2 are present.)**

**CC.No. 02/2024 PW :1 (LW-1) 03.04.2024**

முதல் விசாரணை

நான் அக்ரஹாரம் வாணியக்கரம்பை, பட்டீஸ்வரம் கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் என்ற முகவரியில் குடியிருந்து பட்டீஸ்வரம் அருள்மிக தேனுபுரிஸ்வரர் திருக்கோவிலில் தமிழ்புலவராக பணியாற்றி வருகிறேன். தேனுபுரிஸ்வரர் கோவிலில் 5 அர்ச்சகர்கள் பணியாற்றி வருகிறார்கள். 3 அர்ச்சகர்களுக்க 7 1/2 நாட்கள் பணியும் மற்ற 2 நபர்களில் ஒருவருக்கு 4 நாட்களும் மற்றொருவருக்கு 3 1/2 நாட்களும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 20.10.2019 அன்று கணேச குருக்களும் சுப்பரமணிய குருக்களும் சிவன் சன்னதியில் பணியில் இருந்தார்கள். 20.10.2019 அன்று இரவு 8.00 மணியளவில் கணேச குருக்கள் மற்றும் டிக் கெட் கவுண்டரில் வேலை பார்க்கும் செ. மோகன் ஆகியோர்கள் அலைபேசி மூலமாக என்னை கோவிலுக்குள்ளே வரும்படி அழைத்தார்கள். நான் உடனே கோவிலுக்குள் சென்றேன். கணேச குருக்கள் எனது கையை பிடித்துக் கொண்டு ஓ என்று அழுதார். ஆஞ்சநேயர் சிலையை காணவில்லை. அந்த அஞ்சநேயர் சிலை கருங்கல் சிலையாகும். அந்த சிலையானது இராமர் தீர்த்தம் அருகில் கோஷ்டத்தில் இருந்தது. நான் சென்று பாத்தபோது அந்த இடத்திலிருந்து சிலை

பெயர்க்கப்பட்டிருந்தது. உடனே கிணற்றில் சிலையை தேடினோம். கிணற்றுக்குள் சிலை இல்லை. கோவிலில் உள்ள ஒவ்வொரு சன்னதியாக அந்த சிலையை தேடினோம். அதன்பின்னர் கோவிலில் இருந்த கண்காணிப்பு கேமராவை இரா. பத்மநாபன் மூலமாக ஆய்வு செய்தோம். அந்த காண்காணிப்பு கேமரா பதிவில் 1 பெண் உட்பட 5 நபர்கள் கோவிலுக்குள் வந்து சாமி கும்பிடுகிறார்கள். ஒரு நபர் சூட தட்டில் அவர் கழுத்தில் அணிந்திருந்த ஒரு டாலரை எடுத்து காண்பித்தார். அதன் பிறகு அந்த 5 நபர்களும் பிராகாரத்தை சுற்றி வலம் வருகிறார்கள். அந்த 5 நபர்களும் இராமர் தீர்த்தம் அருகில் உள்ள இரும்பு கேட் அருகே நிற்கிறார்கள். வரும் நபர்களை அவர்கள் கண்காணிக்கிறார்கள். ஒருவர் அந்த ஆஞ்சநேயர் சிலையை அசைத்து எடுத்து ஒரு வெள்ளை நிறம் உள்ள கட்டைப்பைக்குள் வைக்கிறார்கள். பின்னர் அவர்கள்வெளியில் வந்து காரில் ஏறும் காட்சிகள் வரை கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்தது.அந்த விபரங்களை உறுதி செய்துக்கொண்டு. இது தொடர்பாக பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ 1 ஆகும். அந்த புகாருடன் காணாமல் போன ஆஞ்சநேயர் சிலையின் புகைப்படத்தையும் கொடுத்தேன். அந்த காணாமல் போன சிலை என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது தான். அந்த சிலையின் முன் பக்க பின்ன பக்க புகைப்படங்கள் இரண்டு எண்ணிக்கைகள் அ.சா.பொ. 1 வரிசை ஆகும். அதற்கான குறுந்தகடு அ.சா.பொ. 2 ஆகும். நான் கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளில் பார்த்த நபர்களில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். பின்னர் இரண்டு, மூன்று வருடங்கள் கழித்து சிலை திருட்டு தடுப்பு போலீசார் ஆஞ்சநேயர் சிலையை கண்டுபிடித்திருப்பதாக ஆஞ்சநேயர் ஜெயந்தி அன்று சொன்னார்கள். நான் மாலை 4.30 மணிக்கு நானும் கோவில் பணியாளர்களும் சென்று ஆஞ்சநேயர் சிலையை அடையாளம் காண்பித்தோம். அதன் பின்னர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இடை கால பாதுகாப்பில் ஆஞ்சநேயர் சிலையை நான் பெற்று சென்றேன். தற்போது அந்த ஆஞ்சநேயர் சிலையை பாதுகாப்பு அறையில் வைத்துள்ளோம். வழிப்பாட்டில் உள்ளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.